# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




மன்னா – 11 பிப்ரவரி 2021 பிரதி – 11



# ஆயர் மடல்



கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமையடைவதாக!

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! கர்த்தரின் பெரிதான கிருபையால் ஆண்டின் துவக்க தொழுகையை ஆலயத்திலே தொடங்க கிருபை செய்தார். ஆண்டவரை போற்றுவோம்.

தொடர்ந்து கட்டுபாடுகள் நீங்கவும், விடுதலையோடு அனைத்து இறைமக்களும் இணைந்து ஆராதிக்கவும் மன்றாடி ஜெபித்துக்கொள்வோம். நமது திருச்சபை என்னும் உணர்வோடு இணைந்து திருச்சபையை நம்முடைய வளங்களாலும், பங்களிப்பாலும் கட்டியெழுப்பி இறைநாமத்மை மகிமைப்படுத்துவோம். இறைதிட்டம் நம்மூலம் நிறைவேற்ற விரும்பும் ஆண்டவரின் சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். தொடர்ந்து ஆண்டவர் ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

பெருந்தொற்று நோய்த்தடுப்பு மருந்துகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அவைகள் மனித உடலில் சரியாய் செயல்பட்டு முழுமையான விடுதலை உண்டாக்கவும் இறைஆற்றல் வெளிப்படவும் வேண்டிக்கொள்வோம்.

விவசாயிகள் போராட்டம் முடிவுக்கு வரவும், அனைத்து ஏழை மக்களும் வாழ்வுபெறவும், அரசியல் மாற்றங்களும், தலைமைத்துவங்களும் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு தரவும், நல்ல தலைவர்கள் எழும்பவும் ஜெபித்துக்கொள்வோம்.

வரும் மாதம் பாலைவன மன்னா **“சாந்தம்”** என்னும் தலைப்பில் வெளிவர உள்ளது. ஜெபியுங்கள்! பங்களிப்புத் தாருங்கள்!

நற்குணங்கள் நம்மில் உருவாக கர்த்தர் நம்மிலே ஆளுகை செய்து இம்மாதத்திலும் ஆசியோடு வழிநடத்துவாராக! ஆமென்.


**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## நற்குணம்

நற்குணம் நம்மில் உருவாக்கும் இறை இயேசுவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

பொருட்காட்சி திடலில் பழங்கள் இல்லாத மாமரத்தின் செடி ஒன்றை விவசாயி ஒருவர் வாங்கினார். வருடம் உருண்டோடியது. செடியாயிருந்த மாஞ்செடி மரமாய் மாறியது. சுவையான மாங்கனிகளைத் தந்தது.

"**கனிகளினாலே மரத்தை அறிவீர்கள்**" என திருமறை நமக்கு கற்றுத் தருகிறது. நமது கனிகளே நாம் யார் என்று நம்மை பிறருக்கு வெளிப்படுத்தும் என்பதுவே உண்மை.




நற்குணம் கலாத்தியர் 5:22-ல் 9 கனி வகைகளில் ஒன்றாகவும், மனிதவாழ்வின் அடிப்படை கனியாகவும் கூறப்படுகிறது. "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்..." (கலாத்தியர் 5:22,23).

### திருவசனத்தால் நற்குணம் அடையலாம்:-

எப்படி இந்த நற்கனியாகிய நற்குணத்தை அடையலாம் என தியானிப்போம் என்றால் நமது திருமறையை வாசிப்பதும், அதனை தியானிப்பதும் அவைகளைக் கைக்கொள்ளுவதும் நமது வாழ்வில் நற்குணம் அடையச் செய்யும் கருவியாக அமைகிறது. இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டுதான் அப்போஸ்தலர் 17:11-ல் குறிப்பிடப்படுகிறது.

பெரோயா பட்டணத்தை வந்தடைந்த பவுலும், சீலாவும் இந்த பட்டணத்தார் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்ததைப் பார்த்தனர். இது எதினால் என்பதை குறிப்பிடும்போது, "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.

இவர்கள் நற்குணசாலிகளாய் இருந்ததற்கு காரணமாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவது திருமறை வசனத்தை ஏற்றுக்கொண்டதும், தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததுமே எனக் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! நாமும் நற்குணசாலிகளாய் மாறவேண்டுமென விரும்புகிறோமா? திருமறையை கையில் எடுப்போம்! தினந்தோறும் வாசித்து தியானிப்போம். வசனங்களை ஏற்றுக்கொள்வோம், கைக்கொள்ளுவோம் என்றால் நம்மில் மாற்றம் காண்போம்.

## நற்கனிகளினால் நற்குணம் வெளிப்படுத்தலாம்:-

நற்குணம் நாம் எப்படி வெளிப்படுத்தமுடியும் என்றால் நம்முடைய கனிகளால் என்பதைத்தான் திருமறை வெளிப்படுத்துகிறது.

“நற்குல திராட்சைச்செடிகளை நட்டு அதன் நடுவில் ஒரு கோபுரத்தைக்கட்டி அதில் ஆலையையும் உண்டுபண்ணி, அது நல்ல திராட்சைப் பழங்களைத் தருமென்று காத்திருந்தார். அது கசப்பின பழங்களைத் தந்தது” (ஏசா. 5:2).

இதுதான் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது. நல்ல குணம் நம்மில் வெளிப்படும்போது ஆண்டவர் மகிழ்வார் எனவேதான் பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரியாருக்கு எழுதும்போது ரோமர் 15:14-ல் “என் சகோதரரே நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திச்சொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்” என்றுக் குறிப்பிடுகிறார். எனவேதான் ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் எபேசி. 5:9, ஆவியின் கனி நற்குணத்தில் வெளிப்படும் என திருமறையில் குறிப்பிடுகிறது.

ஆண்டவர் நம்மிடம் நற்குணம்வழி இறைநாமத்தை மகிமைப்படுத்தவே எதிர்பார்க்கிறார் எனவேதான் நற்குணத்தை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்திய ரூத் என்னும் பெண்மணியை திருமறை அதிகமாக பாராட்டுகிறது. “உன் முந்தின நற்க்குணத்தைப் பார்க்கிலும், உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது”(ரூத் 3:10).

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். ஆண்டவரால் பாராட்டப்படும் நற்குணம் உருவாக்கிக்கொள்வோம். நற்குணம் உருவாக திருமறையை தினமும் படித்து அவைகளை கடைபிடிப்போம். கனிகளை வெளிப்படுத்தும் இறைநாமத்தை மகிமைப்படுத்த ஆண்டவர் ஆசி அருள்வாராக. ஆமென்.

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

# முரட்டு குணம்

ஒரு பிடிவாதமான முரட்டு குணமுள்ள சிறுபிள்ளை இருந்தாள். சிறுவயதிலே தான் நினைத்த வழியில் சென்றாள். ஒருநாள் ஒரு பெரிய விபத்தில் அகப்பட்டு ஆயுள் முழுவதும் நொண்டியாய் இருக்கவேண்டிய நிலை உருவானது. அது இன்னும் அவளை முரட்டு குணமுள்ளவளாக்கியது. ஒருநாள் அவளைச் சந்திக்க ஒரு ஊழியர் வந்தார். அவள் புரிந்து கொள்ளும் வண்ணமாக ஒரு கதையைச் சொன்னார்.



“ஆதியில் பூமி சமமான புல்வெளியாக இருந்தது, அதில் நடந்த எஜமான் புல்வெளியிடம் உன்னில் ஏன் பூக்கள் இல்லை என வினவினார். புல்வெளி பதிலாக என்னிடம் விதைகள் இல்லையே என்றது. பின்பு அவர் பறவைகளிடம் பேசினார் அவைகள் சகலவித பூ விதைகளையும் தூவியது. விரைவில் கல்வாழை, காட்டு செவ்வந்தி போன்ற ஒருசில மலர்கள் பூத்தன. எஜமான் புல்வெளியிடம் அதிக மணம் தரும் செடிகள் எங்கே? என்றார். புல்வெளி துயரக்குரலில் எஜமான் என்னால் அப்பூச்செடிகளை காப்பாற்ற முடியவில்லை. அவைகள் மேலோட்டமாக முளைப்பதினால் கடுங்காற்று வீசின உடனே அவைகள் பறந்துபோகின்றன” என்றது.

எஜமான் பூமிக்கு கட்டளையிட்டார். பூமி அதிர்ந்தது. புல்வெளியின் இதயத்தைப் பிளந்தது. புல்வெளி வேதனையால் முனகியது. காயத்தால் வருந்தியது. பின் அந்த பிளவினூடே நதி பாய்ந்தது. பறவைகள் மீண்டும் விதவைகளைத் தூவின. மீண்டும் பூச்செடிகள் முளைத்தன. அப்போது கடும் காற்றடித்தாலும் அசைக்கமுடியாத அளவிற்கு அவற்றின் வேர்களை ஆழமாய் விட முடிந்தது. சில நாட்களில் ஆயிரக்கணக்கான பூக்கள் பூத்துக் குலுங்கின. எஜமான் இன்புற்று அங்கு இளைப்பாறினார்” என்று கதையை கூறி பின் அவ்வூழியர் ஒரு வசனத்தை வாசித்தார்.

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலாத். 5:22-23) அதில் ஆவியின் கனி என வரும் இடத்தில் பூ என வாசித்து பின்பு சாந்தம், நீடியபொறுமை போன்ற பூக்கள் பிளவில்தான் செழித்து

வளரமுடியும்" என்றார். அச்சிறுமியும் தன்னுடைய துன்பத்திலும் அப்படிப்பட்ட பூக்கள் பூக்க தேவனிடம் தம்மை அர்ப்பணித்தாள்.

கடினமான நிலத்தில் புல்பூண்டுகள் கூட முளைப்பதில்லை. அதுபோல கடினமான இதயத்திலிருந்து எந்த நற்சுபாவங்களும் வெளிப்பட முடிவதில்லை. ஆகவே தாவீதும் நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை வாஞ்சிக்கிறார். ஆம் இதயம் நொறுக்கப்படும் அனுபவமே தேவனிடம் இன்னும் நம்மைக் கிட்டிச் சேர்க்கிறது. இருதயம் எப்போது பிளக்கப்படுகிறது? துன்பங்களும், பாடுகளுமே நம் இருதயத்தை நொறுக்குகின்றன.

இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபிரெயர் 12:10-11).

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## விலை உயர்ந்த முத்து

இறை இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

உலகில் விலை உயர்ந்தனவாக கருதப்படுபவை பல உண்டு. அதில் அதிகமான மக்களால் கூறப்படுபவை வைரம், வைடூரியம், மரகதம் போன்ற முத்துக்கள். மண்ணின் இயற்கை வளமாக இருந்தாலும் மனிதனுடைய கரங்களில் அது வரும்போது அரியப்பொருளாய் மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட உயரிய பொருளாம் முத்தைவிட விலையுயர்ந்த ஒன்றை திருமறை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

**"குணசாலியான ஸ்திரீயை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது"** (நீதி. 31:10).




திருமறையின் வார்த்தை பொய்யாகாது. குணசாலியான பெண் அனைவராலும் போற்றப்படும் குடும்பத்தை கட்டியெழுப்பி தானும் மகிழ்ச்சியாக வாழ்கிறாள். அவளது நற்குணமே கணவனை ராஜாவாகவும் உருவாக்குகிறது.

### நம்பிக்கைக்குரியவள்:-

கணவனுக்கு நம்பிக்கைக்குரிய பெண்மணி நற்குணசாலி என்கிறது திருமறை. "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் அவன் சம்பத்து குறையாது" (நீதி. 31:11).

பொதுவாக நற்குணம் என்பது செயல்பாட்டில் வெளிப்படும் ஒன்று. மனைவியின் நற்குணம் கணவனுக்குத் தெரியும். நற்குணசாலியைப் போன்ற நடிப்பு நாளடைவில் வெளிப்பட்டுவிடும். எனவேதான் பெண்களின் நற்குணத்தைக் குறிப்பிடும்போது நம்பிக்கைக்குரியவர்களாக சுட்டிக்காட்டப்படுகிறது.

திருமறை குணசாலியான பெண்ணின் குணம் என்று சுட்டிக்காட்டும் குணம் நறுமணம் அல்லது செயல்பாட்டில் வெளிப்படுத்தும் நம்பிக்கை உருவாக்கும் தன்மையாகும். நம்பிக்கைக்குரிய பெண் வாழும் இல்லத்தில் ஆசிக்கும் குறைவில்லை என திருமறை வசனம் சுட்டிக்காட்டுகிறது.

### நன்மை செய்கிறவள்:-

நற்குணத்தின் நறுமணம் மற்றவர்களுக்கே தெரியும், உதவும் என்பதுதான் உண்மை. மலர்களின் வாசம் நுகரப்படுகிறவர்களுக்குத்தான் தெரியும். அதுபோல குணசாலியான பெண்மணியின் குணம் அவள்தம் செயல்பாட்டில் வெளிப்படுகிறது என்கிறது திருமறை. "அவள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனுக்கு தீமையையல்ல நன்மையையே செய்கிறாள்" (நீதி. 31:12).

குடும்பத்தின் வாழ்வுக்கு நாம் எடுக்கவேண்டிய நிலைபாடு இவ்வசனத்தில் கூறப்படுகிறது. உயிரோடு இருக்கும் நாளெல்லாம் நன்மை செய்கிறவர்களாக நம்மை வெளிப்படுத்தவேண்டும். அதே திருமறை நமக்குக் காட்டும் இரண்டாவது நற்குணம் என்று பட்டியலிடுவதுடன், எப்படிப்பட்ட நன்மைகளை செய்யவேண்டும் என நீதி. 31:12-24 வரை தெளிவுப்படுத்துகிறது.

### நாவடக்கம் உள்ளவள்:-

மூன்றாவதாக பெண்ணின் நற்குணமாக கூறப்படுவது நாவடக்கம். பொதுவான ஆய்வில் ஆண்களில் 100 வார்த்தைகளுக்கு பெண்கள் 300 வார்த்தைகள் பேசுவதாக குறிப்பிடப்படுகிறது. பிறரை புரியவைக்க வார்த்தைகளை அதிகம் பயன்படுத்தும் பெண்களையும், செயல்களை அதிகம் பயன்படுத்தும் ஆண்களையும் குறிப்பிட்டாலும், பெரும்பாலான இடங்களில் வெற்றி பெண்களுக்கும், அவர்களின் வார்த்தைகளுக்கும், கண்ணீருக்குமே கிடைத்துவிடுகிறது.

"தன் வாயை ஞானம்விளங்கத் திறக்கிறாள்; தயவுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" (நீதி. 31:26)

குணசாலியான பெண்ணின் வார்த்தை எப்படி இருக்கவேண்டும் என இத்திருமறை வசனம் விளக்கி நிற்கிறது.

குணசாலியான பெண் முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தவளாகக் குறிப்பிடும் திருமறை என்னையும், உங்களையும் குணசாலியானவர்களாய் வாழ அழைக்கிறது. எப்படி நாம் வாழமுடியும் என்றால் நீதி. 31:30 கூறுகிறது "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்"

கர்த்தருக்குப் பயப்பட்டு வாழ்வோம்; குணசாலிகளாய் திகழ்வோம். இறை ஆசி பெறுவோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ H.A. கிருஷ்ணபிள்ளை

### இதயம் திறந்தால் இயேசுவை காணலாம்



மண்ணில் : 23.04.1827
விண்ணில் : 02.02.1900
ஊர் : ரெட்டியார்பெட்டி
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

வைணவ குடும்பம், சிறந்த தமிழ் பண்டிதரின் மகனாகப் பிறந்தார் கிருஷ்ணப்பிள்ளை. சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மனப்பாடமாக கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். கிருஷ்ணப்பிள்ளைக்குத் தமிழ் மீது அதிக நாட்டம். இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையும் எளிதாய் கற்றுத் தமிழ் பண்டிதரானார்.

அச்சமயம், வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தம் பணியை ஆரம்பித்தார். ஆனால் கிறிஸ்தவர்களிடம் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவே இல்லை.

ஒருநாள் ஹக்ஸ்டபிள் என்ற மிஷனெரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணப்பிள்ளைக்கு கொடுக்கவே, வெறுப்படைந்த அவர் தன் வேலையையும் விட்டுவிட்டார். ஆனாலும் மிஷனெரியின் அன்பு அவரை சிந்திக்க வைத்தது.

அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இதயத்தைத் திறந்து கொடுத்தனர். அவர்களில் தனக்கொடி ராஜீ என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணப்பிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

ஓர் இரவு, கிருஷ்ணப்பிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவை குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தமிழ் பண்டிதரான கிருஷ்ணபிள்ளை, கிறிஸ்துவை புகழ்ந்து பாடல்கள் எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் அவர் மூலமாக வெளிவந்தவையே. மாபெரும் மிஷெனெரிகளான சர்ஜெண்ட், உவாக்கர், ஏமிகார்மைக்கேல் மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக்கொடுத்த இவர், 1900 ஆண்டு பிப்ரவரி 3-ம் தேதி என்றும் இறைவனை புகழ்ந்து பாட விண்ணகம் சென்றார்.

அன்பரே! கிருஷ்ணப்பிள்ளையைப்போன்று இயேசுவை மட்டுமே பாடுகிறீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : ஆண்டவர் என் இருதயத்தைத் திறந்தார். அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன் - H.A. கிருஷ்ணப்பிள்ளை

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! நீர் தந்த வாழ்வில் நான் உம்மை துதிக்காமல் இருந்தால் எனக்கு நாவு இருந்தும் என்ன பயன்?

**தியானத்திற்கு** : யாத்திராகமம் 9, சங்கீதம் 62-63, ரோமர் 13-14

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் **Mr. Mayshack** அவர்களின் தகப்பனார் **Mr. Siluvai Rajan** அவர்கள் ஜனவரி மாதம் 6-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# உயர்ந்த குணம் எது?




மற்றவன் குணம் எப்படி இருக்கிறது என்று ஆராய்வதைவிட, உன் குணம் எப்படி இருக்கிறது என்று பார். அதுவே உயர்ந்த பண்பு.

தேங்காய் உடைத்ததும் வெண்மையான பருப்புத் தெரியும். மனதை சுத்தமாக வைத்துக்கொள் என்பதே, தேங்காய் உடைப்பதின் தத்துவம்.

குளிக்காவிட்டால் நஷ்டம் நமக்குத்தான் தண்ணீருக்கல்ல. அதுபோல் கடவுளை நினைக்காவிட்டால் நஷ்டம் நமக்குத்தான் கடவுளுக்கல்ல.

எந்த வேளையும் கடவுளை நினைக்கவேண்டும். காலையில் எழும்போது, உணவு உண்ணும்போது, இரவு தூங்கும்போதாவது அவசியம் நினைக்கவேண்டும்.

ஒரு விதை பலவாக பெருகுவதுபோல, நல்வினையோ, தீவினையோ நம்மிடம் ஒன்றுக்கு பலவாக வந்துச் சேரும். அதனால் நாம் செய்யும் செயல்கள் தூயனவாக அமைவது நல்லது.

நாம் கடவுளின் சந்நிதியில் (உலகம்) வாழ்கிறோம். அதனால் நல்ல சிந்தனை, சொல், செயல் என்று நம்மை இறைவனோடு மட்டுமே தொடர்புபடுத்திக் கொள்ளவேண்டும்.

கடவுள் கண்ணுக்கு தெரியவில்லை. அதனால் கடவுள் இல்லை என்று கூறினால் உயிரும் கண்ணுக்கு தெரியவில்லை, அதனால் உயிர் உடலில் இல்லை என்று ஆகிவிடுமா?

## நற்குணத்தின் பண்புகள்

### நீதிசெய்யும் நற்குணம்:-

நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக; முகதாட்சணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக (உபா. 16:19).

திறமை மற்றும் தகுதி உடையோருக்கு நீதிதுறையில் பணி வழங்கும் காலமிது. திறமை என்பதை சம்பந்தபட்டவர் தவறாக பயன் படுத்துவதும் உண்டு. ஒருவர் திறமையோடு சிறந்த நற்குணம் உடையவராகவும் வாழ்வது மனிதர்க்கு நல்லது செய்திட இயலும்.



மோசே தன் காலத்தில் கடவுளின் நீதி எல்லோருக்கும் கிடைத்திட இறைசட்டத்தை மதிப்பவர்களான திறமையான மனிதரை நீதிபதியாக நியமித்தார். ஆனால் அவர்களோ தங்கள் திறமைகளை வைத்து முன்மாதிரியற்று வாழ்ந்தார்கள்.

ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் (யோவான் 7:37). தாகமில்லாதவன் கடவுளிடம் வரான். ஒரு நீதிபதிக்கு நீதியின்மேல் பசிதாகம் காணப்படவேண்டும். அந்த பசிதாகம் உடையோர் பணம், பொருள், சிற்றின்பம் மூலமாக தங்கள் பசியையும், தாகத்தையும் தீர்க்க முன்வருவதில்லை. சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், அநீதிகள், பேதங்கள் மறையும்போது நீதி வழங்குவோர் தங்கள் பசிதாகத்தில் திருப்தியடைகிறார். பணம், பொருள், சிற்றின்பம், ஏற்றத்தாழ்வுகள் லௌகீகமானது. கடவுள் வெறுப்பதை நீதிவழங்குவோரும் வெறுப்பதுதான் நீதிபதிக்கு வேண்டிய சிறந்த குணமாக இருக்கமுடியும்.

இன்று பல இடங்களில் மேய்ப்பர்களே மேய்வதால் ஆடுகளின் கூடாரத்தில் மரண ஓலம் கேட்கிறது. நெருப்பைக் கரையான் அரிக்கமுடியாததுபோல நேர்மையானவனைப் பாவமும் பழியும் ஒன்றும் செய்திட இயலாது. எனவே போதகரை கடவுளின் சந்நிதியில் அவரே கடவுளின் பிரதிநிதியாக பார்ப்பதுபோல, நீதிபதியை நீதிபீடத்தில் கடவுளின் நீதியை வெளிப்படுத்தும் பிரதிநிதியாக பார்க்கும் காலம் வரவேண்டும். நாம் நீதிவழங்குபவரானால் அதற்குரிய நற்குணங்களோடு வாழவேண்டும் என இறைமகன் இயேசு விரும்புகிறார்.

## மேன்மையடையச் செய்யும் நற்குணம்:-

“மேன்மைக்கு முன்னானது தாழ்மை” (நீதி. 15:33, 18:12).

வேதம் பல இடங்களிலே திட்டமும் தெளிவுமாக “மேன்மைக்கு முன்னானது தாழ்மை” என்று சொல்கிறது. கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் மிகுந்த மனத்தாழ்மையோடு நாம் நடந்துக்கொள்ளும்போது நிச்சயமாகவே நாம் மேன்மையடைவோம். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் சம்பூரணமாய் நம்மேல் வந்து இறங்கி தங்கியிருக்கும்.



உயர்ந்த மலையில் இருந்து ஒரு ஆறு வேகமாய் ஓடி வருகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அது எந்த இடத்தை நோக்கி ஓடிவரும் தெரியுமா? அது ஒருபோதும் குன்றுகளின்மேல் ஏறிப் போவதில்லை. தாழ்வான பள்ளத்தை நோக்கிதான் கடந்து வருகிறது. மனமேட்டிமையாய் குன்றுபோல் இருக்கிற மனிதர்களை நோக்கி ஆசீர்வாத நதி ஓடி வருவதில்லை. தாழ்மையுள்ளவர்களை நோக்கித்தான் தேவனுடைய கிருபையும், மேன்மையும் ஆசீர்வாதங்களும் வந்து சேருகின்றன.

தாழ்மையுள்ளவன் எல்லாராலும் கனப்படுத்தப்படுவான் (சங்கீதம் 138:6). தாழ்மையுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்திலே பெரியவனாயிருப்பான் (மத்தேயு 18:4). தாழ்மையுள்ளவன் தேவனாலே உயர்த்தப்படுவான் (லூக். 14:11). தாழ்மையுள்ளவன் தேவகிருபையை அபரிதமாய் பெற்றுக்கொள்வான் (யாக். 4:6).

ஒருவன் கர்த்தருக்கு முன்பாக தாழ்மையோடு நடந்தால் கர்த்தர் அதைக் கண்டு மனதுருகி அவன்மேல் கொண்டிருக்கிற உக்கிர கோபத்தை மாற்றி நியாயத்தீர்ப்பை விலக்கிவிடுவார். வேதத்தில் ஆகாப், மனாசே என்று இரண்டு ராஜாக்களைக் குறித்து வாசிக்கிறோம். தேவனுடைய கோபாக்கினை அவர்கள்மேல் இறங்கி வரக்கூடியதாயிருந்தது. ஆனால் அவர்கள் தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, பணிந்துகொண்டபோது அவர்கள்மேல் வரவேண்டிய தண்டனை அவர்கள்மேல் வராமல் கர்த்தர் மனதிரங்கி மன்னித்தார். இயேசு கிறிஸ்துவை நோக்கி பாருங்கள்! எவ்வளவு பெரியவர் அவர், “பிதாவுக்கு சமமாய் இருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி

தம்மைத்தாமே தாழ்த்தினார்” (பிலிப்பியர் 2:8).

கிறிஸ்துவின் தாழ்மையை தரித்துக்கொள்வோம். ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும்போது தேவனிடத்திலே தாழ்மையைத் தாரும் என்று கேட்டு ஜெபிப்போம். தாழ்மையாகிய நற்குணத்தைப் பெற்றுக்கொள்ள கண்ணீரோடு ஆண்டவரின் பாதங்களைப் பற்றிக்கொண்டு மன்றாடுவோமாக.

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## 2020 Lockdown Quiz winners

| Honours | 1st Prize |
|---|---|
| Mr. Sebulon | Mr. Lenin Raj |
| Mrs. Priyadarsini Kanagavel | Mr. Nethaji |
| | Mr. Ramesh |
| **2nd Prize** | Mrs. Boopathi Baskar |
| Mr. Anto Kingston | Mrs. Golden Irene Sheeja Robin |
| Mr. Yesudhas | Mrs. Mahizha Jenkin |
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Percy Jean |
| Mrs. Ancy Daniel | Mrs. Sheeba Sujith |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Shiney Johan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Thamari Johnson |
| Mrs. Sarah Raja Singh | Mrs. Virgin Jegatha Jino |

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ பிப்ரவரி 2021

| | | |
|---|---|---|
| 05-02-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sheeba Sujith |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sujith Gladson |
| 12-02-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sujatha Shalini Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. P. Suresh |
| 19-02-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sumi Vinobha |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. M. Sujin |
| 26-02-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Shiney Johan |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sheeju Johnson |
| 05-03-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sapthikha Jerry |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sylus |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 04-02-2021 | வியாழன்–இரவு ஜெபக்கூடுகை<br>இணையம் வழி நேரலை / நேரம்: இரவு9 மணி முதல் |
| 05-02-2021 | வெள்ளி ஆராதனை |
| 12-02-2021 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 19-02-2021 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 26-02-2021 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 01-03-2021 | திங்கள் - அருணோதய ஆராதனை<br>இணையம் வழி நேரலை/நேரம்: அதிகாலை 5 மணி முதல் |

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 93

### பிப்ரவரி 2021 மாத கேள்விகள்
### (தீத்து, பிலேமோன் மற்றும் யாக்கோபு)

1. பிணியாளியை இரட்சிப்பது எது?
2. தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறவன் யார்?
3. அநீதி நிறைந்த உலகம் எது?
4. எதற்காக முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துக் போடுகிறார்கள்?
5. நான் பெற்ற மகன் என்று பவுல் யாரைக் கூறினார்?
6. விசுவாசத்தின் பரீட்சையானது எதை உண்டாக்கும்?
7. முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் எப்படி காத்திருக்கவேண்டும்?
8. கிரியைகளினாலே நீதியுள்ளவளாக்கப்பட்டவள் யார்?
9. இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் கட்டப்பட்டவனாய் இருக்கிறேன் என்று கூறியது யார்?
10. சோதனையை சகிக்கிறவன் எதைப் பெறுவான்?
11. ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது எது?
12. சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி கடிதம் எழுதியது யார்?
13. பெருவயிற்று சோம்பேறிகள் யார்?

14. உலக சிநேகிதன் யாருக்கு பகைஞன்?
15. நியாயத்தீர்ப்புக்கு முன்பாக எது மேன்மைபாராட்டும்?
16. யாருடைய வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கும்?
17. காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறவன் யார்?
18. இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு யாரைவிட்டு விலகவேண்டும்?
19. வைராக்கியமும், விரோதமும் உள்ள இடத்தில் இருப்பது எது?
20. விசுவாசத்தில் ஐசுவரியவான்கள் யார்?

## ஜனவரி 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஆணையிடுதல் - எபிரெயர் 6:16
2. மன்னிப்பு – எபிரெயர் 9:22
3. ஏனோக்கு – எபிரெயர் 11:5
4. தேவ குமாரனாகிய இயேசு – எபிரெயர் 4:14
5. ஸ்தோத்திரபலி – எபிரெயர் 13:15
6. நீதியுள்ள செங்கோல் - எபிரெயர் 1:8
7. நியாயப்பிரமாணம் - எபிரெயர் 7:28
8. பொறுமை – எபிரெயர் 10:36
9. மோசே – எபிரெயர் 3:2,5
10. இரண்டாம் திரைக்குள்ளே – எபிரெயர் 9:3
11. பிசாசு – எபிரெயர் 2:14
12. தேவனால் - எபிரெயர் 5:4
13. நம்பிக்கையை அறிக்கையிடுதலில் - எபிரெயர் 10:23
14. தேவனுடைய வார்த்தை – எபிரெயர் 4:12
15. பிரதான ஆசாரியன் - எபிரெயர் 9:7
16. தேவன் - எபிரெயர் 12:29
17. கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் - எபிரெயர் 10:29
18. இருதயம் - எபிரெயர் 13:9
19. நீதியின் ராஜா – எபிரெயர் 7:2
20. விசுவாசத்தினாலே – எபிரெயர் 11:1,2

## ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Nisha Rajan |
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Baskar | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Felsi Rani John | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Shiney Johan |
| Mrs. Juslin Jaslin | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Leela Gladson | Mrs. Thamari Johnson |
| Mrs. Manju Martin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Mary Praveena Gobinath | |

## பாலைவன மன்னாவில் பெண்கள் பகுதியில் திருமறை அறிவுப்போட்டிக்கு விடை எழுதியவர்களின் பரிசு வரிசை (January 2020 to November 2020)

| Honours | 1st Prize |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Ashika Joel |
| Mrs. Ancy Daniel | Mrs. Aspin Bejo |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Boopathi Basker |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Juslin Jaslin |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Nisha Rajan |
| Mrs. Leela Gladson | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Manju Martin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Percy Jean | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Sapthekha Jerry Sathya | **2nd Prize** |
| Mrs. Sarah Rajasingh | Mrs. Felsi Rani John |
| Mrs. Sathya Priya Ramesh | Mrs. Jancy Deepa Victor |
| Mrs. Shiney Johan | Mrs. Regin Justa Vinolin |
| Mrs. Thamari Johnson | Mrs. Synthia Srinivas |
| Mrs. Vanitha Rani Prince | Mrs. Evangelin Yesudhas |
| Mrs. Virgin Jegatha Jino | Mrs. Gracilin Melba Sujin |

## பிப்ரவரி 2021 மாத கேள்விகள்
## (உன்னதப்பாட்டு முழுவதும்)

1. நேசரின் உதடுகள் எதைப் போன்றது?
2. வெளிமானுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறவர் யார்?
3. தமஸ்குவின் திசையை நோக்கும் கோபுரம் எது?
4. கூந்தல் எந்த மலையில் மேயும் வெள்ளாட்டு மந்தைக்கு ஒப்பிடப்படுகிறது?
5. காகத்தைப்போல் கருமையாய் இருப்பது எது?
6. சாலொமோன் ராஜா பண்ணுவித்த இரதம் எந்த இடத்தின் மரத்தால் ஆனது?
7. ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது எது?
8. கர்மேல் மலையைப் போலிருப்பது எது?
9. கை மற்றும் விரல்களிலிருந்து வடிந்த வாசனையுள்ள பொருள் எது?
10. விசித்திர தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருப்பது எது?
11. பாதாளத்தைப்போல் கொடியதாயிருக்கிறது எது?
12. திராட்சத் தோட்டங்களை கெடுக்கிற விலங்குகள் எது?
13. முக்காட்டின் நடுவே கன்னங்கள் எப்படி இருக்கிறது?
14. கர்த்தரின் எந்தக் கை என்னை அணைத்துக்கொள்கிறது?
15. வெள்ளைக்கல் தூண்கள் போலிருப்பது எது?
16. பட்டயம் பிடித்து, யுத்தத்துக்குப் பழகினவர்களாயிருக்கிறவர்கள் யார்?
17. பதினாயிரம் பேர்களில் சிறந்தவர் யார்?
18. சாலொமோனின் திராட்சத்தோட்டம் எங்கு உண்டாயிருந்தது?
19. குன்றும், பிளப்புமான கன்மலைகளில் குதித்து வரும் விலங்கு எது?
20. வாசனை வீசும் பழம் எது?

## ஜனவரி 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. வேலை செய்கிறவன் - பிரசங்கி 5:12
2. இடுக்கண் - பிரசங்கி 7:7
3. காற்று – பிரசங்கி 1:6
4. ஞானிகளின் வாக்கியங்கள் - பிரசங்கி 12:11

5. ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் - பிரசங்கி 2:26
6. காலையில் - பிரசங்கி 11:6
7. நடையை - பிரசங்கி 5:1
8. பிடிவாதமாய் - பிரசங்கி 8:3
9. கிரியையை – பிரசங்கி 3:11
10. இணங்குதல் - பிரசங்கி 10:4
11. சொப்பனம் - பிரசங்கி 5:3
12. ஞானம் - பிரசங்கி 9:18
13. அறிவுபெருத்தவன் - பிரசங்கி 1:18
14. வீடு – பிரசங்கி 10:18
15. நற்கீர்த்தி – பிரசங்கி 7:1
16. பணப்பிரியன் - பிரசங்கி 5:10
17. விருந்து – பிரசங்கி 10:19
18. வாய்க்காக – பிரசங்கி 6:7
19. முப்புரிநூல் - பிரசங்கி 4:12
20. இருதயம் - பிரசங்கி 7:3

**ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jean C. R. Shibin | Mr. Lenin Raj |
| Mr. Anand | Mr. Jino John | Mr. Rajan V. N. |
| Mr. Anu | Mr. Johan Pratheep | Mr. Ramesh R. |
| Mr. Daniel Raj P. | Mr. Justus Martin | Mr. Robin Devadhas |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Kanagavel | Mr. Sujith Gladson |

**பாலைவன மன்னாவில் ஆண்கள் பகுதியில் திருமறை அறிவுப்போட்டிக்கு விடை எழுதியவர்களின் பரிசு வரிசை (January 2020 to November 2020)**

| Honours | 1st Prize | 2nd Prize |
|---|---|---|
| Mr. Austin Daniel Raj | Mr. Alex Baskar | Mr. Anshio Shajin |
| Mr. Jean C. R. Shibin | Mr. Bejo Nelson | Mr. Anu |
| Mr. Jino John | Mr. Daniel Raj P. | Mr. Sujith Gladson |
| Mr. Johan Pratheep | Mr. Jaslin Sundara Kumar | |
| Mr. Justus Martin | Mr. Prince J. P. | |
| Mr. Kanagavel | Mr. Ramesh R. | |
| Mr. Lenin Raj | Mr. Robin Devadhas | |
| Mr. Rajan V. N. | | |

# May God Bless All

## Birthday Celebrants – February 2021

| | |
|---|---|
| 01st Feb | Master. Devarsh Ruban, S/o Mr. Atheesh |
| 01st Feb | Master. Winfred Sharon, S/o Mr. Winson |
| 11th Feb | Mr. Nalam Dimalson |
| 12th Feb | Mrs. Neethu, W/o Mr. Bino Vetha Raja Sing |
| 12th Feb | Miss. Shirley Susan Issac, D/o Mr. Isaac Solomon |
| 12th Feb | Master. A.S. Asher Juish Bension, S/o Mr. Arun Paul |
| 14th Feb | Mr. Jenkin Raj |
| 14th Feb | Miss. Angeline, D/o Mr. T. Raju |
| 14th Feb | Miss. Jessica, D/o Mr. T. Raju |
| 15th Feb | Miss. Herlin Reeba, D/o Mr. Herbert |
| 16th Feb | Miss. Tanisa, D/o Mr. Ramesh |
| 16th Feb | Mrs. Boopathi, W/o Mr. Baskar |
| 16th Feb | Mr. Anto Kingston |
| 16th Feb | Miss. Christilin Vijisha, D/o Mr. Jino John |
| 18th Feb | Mr. Venil Sing |
| 19th Feb | Mr. S. Kannan |
| 20th Feb | Miss. Riana Aharin, D/o Mr. Nalam Dimalson |
| 21st Feb | Miss. Lindsy R. Macedo, D/o Mr. Rex Macedo |
| 21st Feb | Miss. Zaralin Pius Justa, D/o Mr. Vinolin |
| 22nd Feb | Mrs. Vanitha Rani, W/o Mr. J.P. Prince. |
| 23rd Feb | Mrs. Femila Berin, W/o Mr. Berin Raja |
| 24th Feb | Mr. Berin Raja |
| 24th Feb | Master. Bebin Rufus, S/o Mr. Kannan |
| 25th Feb | Miss. B. N. Mahima, D/o Mr. Bino Vetha Raja Sing |
| 26th Feb | Miss. A. Beryl Ida, D/o Mr. D. Ahigen Paul |
| 28th Feb | Mr. Edward Sam |
| 29th Feb | Mrs. Eben Silviya, W/o Mr. Ennesar |
| 29th Feb | Miss. Liyana Jeshu, D/O Mr. Livingston |

## Wedding Anniversary Celebrants – February 2021

| | |
|---|---|
| 04th Feb | Mr. Gobinath & Mrs. Mary Praveena |
| 09th Feb | Mr. Bino Vetha Raja Sing & Mrs. Neethu |
| 14th Feb | Mr. Ramesh & Mrs. Sathya Priya |
| 20th Feb | Mr. Johnson Raj & Mrs. Thamari |
| 21st Feb | Mr. Johan Pratheep & Mrs. Shiney |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. **இந்த புதிய வருடத்தில் திருச்சபை திறக்கப்படவும், திருச்சபை ஆராதனைகளில் ஆண்டவர் பிரசன்னம் அனைவரும் உணரப்படவும், திருச்சபையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.**

6. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. வருகிற நாட்களில் நடைபெறும் தேர்தல்களுக்காகவும், நல்ல தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

### இறைவேண்டல் குறிப்புகள்:-

1. கொரோனா மற்றும் உருமாறிய கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......

6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – பிப்ரவரி 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மேலும் ஒரு புதிய ஆண்டைக்காண கர்த்தர் நமக்கு கிருபை செய்திருக்கிறார். இந்த 2020-வது ஆண்டில் இதுவரை திருமறையை ஒருமுறையாவது முழுமையாய் வாசிக்காதவர்கள் உண்டென்றால் அதை வாசிக்க ஆவல்கொள்ளுங்கள். அதற்கான திருமறைப்பகுதி இந்த மாதத்திலிருந்து தரப்படுகிறது. திருமறையை முழுவதுமாக ஒரு முறையாவது வாசிப்பது நமது மனதுக்கு மகிழ்வைத் தரும்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| பிப்ரவரி 1 | திங்கள் | சங். 104:24-30 | சங். 104:30 | லேவி. 12-14 |
| பிப்ரவரி 2 | செவ்வாய் | ஏசா. 40:27-31 | ஏசா. 40:29 | லேவி. 15-17 |
| பிப்ரவரி 3 | புதன் | ஏசா. 61:1-5 | ஏசா. 61:4 | லேவி. 18-20 |
| பிப்ரவரி 4 | வியாழன் | எசேக். 36:22-27 | எசேக். 36:26 | லேவி. 21-23 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **பிப்ரவரி 5** | **வெள்ளி** | **ஏசாயா 43:18-21** | **ஏசா. 43:19** | **லேவி. 24-25** |
| பிப்ரவரி 6 | சனி | ஏசா. 55:8-13 | ஏசா. 55:11 | லேவி. 26-27 |
| பிப்ரவரி 7 | ஞாயிறு | ஆதி. 3:1-10 | ஆதி. 3:9 | எண். 1-2 |
| பிப்ரவரி 8 | திங்கள் | 2கொரி. 4:11-18 | 2கொரி. 4:16 | எண். 3-4 |
| பிப்ரவரி 9 | செவ்வாய் | யோவா. 13:33-35 | யோவா. 13:34 | எண். 5-6 |
| பிப்ரவரி 10 | புதன் | அப். 17:22-34 | அப். 17:27b | எண். 7-8 |
| பிப்ரவரி 11 | வியாழன் | ஏசா. 44:21-28 | ஏசா. 44:22 | எண். 9-11 |
| **பிப்ரவரி 12** | **வெள்ளி** | **ஏசா. 52:11-15** | **ஏசா. 52:12b** | **எண். 12-14** |
| பிப்ரவரி 13 | சனி | ஏசா. 50:1-11 | ஏசா. 50:7 | எண். 15-17 |
| பிப்ரவரி 14 | ஞாயிறு | **ஏசா. 45:1-15** | **ஏசா. 45:5** | எண். 18-20 |
| பிப்ரவரி 15 | திங்கள் | ஏசா. 65:17-25 | ஏசா. 65:17 | எண். 21-23 |
| பிப்ரவரி 16 | செவ்வாய் | ஏசா. 66:19-23 | ஏசா. 66:22 | எண். 24-26 |
| பிப்ரவரி 17 | புதன் | யோவே. 2:12-18 | யோவே. 2:12 | எண். 27-30 |
| பிப்ரவரி 18 | வியாழன் | மாற். 14:3-9 | மாற். 14:8 | எண். 31-33 |
| **பிப்ரவரி 19** | **வெள்ளி** | **மாற். 10:35-40** | **மாற். 10:37** | **எண். 34-36** |
| பிப்ரவரி 20 | சனி | மத். 26:20-25 | மத். 26:25 | உபா. 1-2 |
| பிப்ரவரி 21 | ஞாயிறு | மத். 8:1-4 | மத். 8:3 | உபா. 3-4 |
| பிப்ரவரி 22 | திங்கள் | மத். 26:69-75 | மத். 26:72 | உபா. 5-7 |
| பிப்ரவரி 23 | செவ்வாய் | மாற். 15:16-27 | மாற். 15:21 | உபா. 8-11 |
| பிப்ரவரி 24 | புதன் | யோவா. 19:25-27 | யோவா. 19:27 | உபா. 12-15 |
| பிப்ரவரி 25 | வியாழன் | யோவா. 18:3-11 | யோவா. 18:19 | உபா. 16-19 |
| **பிப்ரவரி 26** | **வெள்ளி** | **யோவா. 3:1-15** | **யோவா. 3:2** | **உபா. 20-23** |
| பிப்ரவரி 27 | சனி | மத். 27:16-26 | மத். 27:16 | உபா. 24-27 |
| பிப்ரவரி 28 | ஞாயிறு | லூக். 5:17-26 | லூக். 5:20 | உபா. 28 |
| மார்ச் 1 | திங்கள் | லூக். 23:7-12 | லூக். 23:11 | உபா. 29 |
| மார்ச் 2 | செவ்வாய் | மத். 27:15-26 | மத். 27:16 | உபா. 30-31 |
| மார்ச் 3 | புதன் | யோவா. 18:13-24 | யோவா. 18:24 | உபா. 32-34 |
| மார்ச் 4 | வியாழன் | யோவா. 18:24-28 | யோவா. 18:28 | யோசுவா 1-4 |
| **மார்ச் 5** | **வெள்ளி** | **லூக். 23:50-53** | **லூக். 23:50** | **யோசுவா 5-7** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**